# வருமானவரித் தகவல் காரியவிபர இதழ்

## ஜனவரி 2021

---

### உங்கள் வருமானவரி விபர அறிக்கையை (tax return) தாக்கல் செய்வது எப்படி

உங்கள் வருமானவரி விபரங்களை தாக்கல் செய்வதற்கு உங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா? கனடா இறைவரி முகவர் அமைப்பு (The Canada Revenue Agency/ CRA) சமூகத் தொண்டர்கள் வருமான வரித் திட்டம் (Community Volunteer Income Tax Program) என்ற செயல்திட்டம் வழியாக வருமானவரி விளக்க நிகழ்வுகளை தகைமையுடைய பொதுமக்களுக்கு என்று இலவசமாக நடாத்தி வருகிறது.

உங்கள் வதிவிடப் பகுதியில் இலவசமாக நடாத்தப்படும் வருமான வரி விளக்க நிகழ்வுகளின் பட்டியல் ஒன்றினை நீங்கள் CRA முகவர் அமைப்பின் இணையத் தளம் Canada.ca/revenue-agency சென்று பார்க்கலாம். ரொறொன்ரோ மாநகராட்சியும் இலவசமான வருமான வரி விளக்க நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறது; இது தொடர்பிலான மேலதிக தகவல் பெறுவதற்கு கணினி வழியாக toronto.ca சென்று பார்க்கலாம் அல்லது 311 தொலைபேசி எண்ணையும் அழைக்கலாம்.

இவ்வகையான தகவல் புதுப்பிக்கப்பட்டு, மேலதிக வருமானவரி விளக்க நிகழ்வுகளுடன் 2021 மார்ச்சு மாதத்துக்கு அண்மையான காலத்தில் வழங்கப்படும். இன்றைய கோவிட்-19 நோய் நிலவரம் காரணத்தால் இவ்வாறான வருமானவரி விளக்க நிகழ்வுகளில் சில கணினி வழியாக வழங்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

உங்களுடைய வருமானவரி விபரங்களை நீங்கள் CRA அமைப்பின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள பின்வரும் வலைத்தாக்கல் மென்பொருள் (Netfile software) ஒன்றினைப் பயன்படுத்தி கணினி வழியாகவும் தாக்கல் செய்ய முடியும்:

- CloudTax
- H&R Block (கணினி வழியானது)
- SimpleTax
- Turbotax
- UFile

## வருமானவரிக் கழிவுகள் மற்றும் நலன்கள்

ஒவ்வொரு வருடமும் உங்கள் வருமானவரி விபரங்களைத் தாக்கல் செய்வதன் பலனாக நீங்கள் வருமானவரிக் கழிவுகள் மற்றும் நலன்களைப் பெறுகின்ற தகைமையை அடைய முடியும்.

## குறைந்த வருமானம் கொண்ட நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கான வருமானவரி

## The Low-income Individuals and Families Tax (LIFT)

- இந்த ஏற்பாட்டின் கீழ் குறைந்த வருமானம் மற்றும் குறைந்த பட்ச ஊதியம் பெறும் தொழிலாளர்களில் தனித்தவர்களுக்கு $850 டாலர் வரையிலும் தம்பதியருக்கு $1,700 வரையிலும் தனியான வருமானவரி நிவாரணம் வழங்கப்படுகிறது.

## ஒன்ராறியோ பிள்ளை நலன்

## Ontario Child Benefit

- இதன் கீழ் குறைந்த வருமானம் தொடக்கம் நடுத்தர வருமானம் வரையிலான குடும்ப வருமானம் பெறுவோருக்கு, அவர்கள் உழைப்பவர்கள் ஆகவோ அல்லது உழைக்காதவர்கள் ஆகவோ இருந்தாலும், கூடியபட்சம் $1,434 டாலர்கள் வருடம் ஒன்றுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

## ஒன்ராறியோ திரில்லியம் நலன்

## The Ontario Trillium Benefit (OTB)

- இதில் ஒன்ராறியோ விற்பனவு வரிக் கழிவு (Ontario Sales Tax Credit) உதவித் தொகை அடங்குகிறது. குறைந்த வருமானம் பெறுவோராக உள்ள ஒன்ராறியோ வாசிகள் செலுத்துகின்ற விற்பனவு வரிக்குரிய நிவாரணமாக இது கொடுக்கப்படுகிறது. வருடாந்தம் கூடிய பட்சக் கழிவு உதவித் தொகையாக $313 டாலர்கள் ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயதுவந்தவருக்கும் பிள்ளைக்கும் வழங்கப்படுகிறது.

## கனடா பிள்ளை நலன்

## Canada Child Benefit (CCB)

- இதன் கீழ் கூடிய பட்ச வருடாந்த நலனாக 6 வயதுக்கு கீழ்பட்ட பிள்ளைக்கு $6,765 டாலர் மற்றும் 6 முதல் 17 வயதுடைய பிள்ளைக்கு $5,708 டாலர் என உதவி வழங்கப்படுகிறது.
- இந்த CCB நலனின் கீழ் பிள்ளை வலுக்குறைவு நலனும் (child disability benefit) அடங்குகிறது. இதற்கான கூடியபட்ச நலன் தகைமை பெறும் பிள்ளைக்கு மாதாந்தம் $240 டாலர் வழங்கப்படுகிறது.

## கனடா தொழிலாளர் நலன்

## Canada Workers Benefit (CWB)

- தொழில் செய்து கொண்டு இருப்பவர்களாய் குறைந்த வருமானம் கொண்ட தனிநபாகள் மற்றும் குடும்பங்களுக்கு வரிநிவாரணமாக இந்த மீளஅளிக்கப்படும் வரிக் கொடுப்பனவு கிடைக்கிறது. இதற்கான கூடிய பட்ச கொடுப்பனவு தனிநபர்களுக்கு $1,381 டாலரும் குடும்பங்களுக்கு $2,379 டாலரும் ஆகும்.
- இந்த CWB நலனின் கீழ் வலுக்குறைவுக்கான துணை உதவித் தொகையும் அடங்குகிறது. இதற்கான கூடியபட்ச கொடுப்பனவு தகைமையுடைய தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு $713 டாலர் ஆக உள்ளது.

## வலுக்குறைவு வரிக் கழிவு

## Disability Tax Credit (DTC)

- இந்த வரிக்கழிவு வலுக்குறைவு கொண்ட நபர்கள் அல்லது அவர்களுக்கு ஆதார உதவி வழங்கும் நபர்கள் செலுத்த வேண்டிய வருமான வரியினைக் குறைப்பதற்கு உதவுகிறது.
- இதற்கான வருடாந்த உயர்ந்த பட்ச தொகை 18 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்களுக்கு $8,416 டாலர் ஆகவும் 18 வயதுக்கு குறைவான தனிநபர்களுக்கு $5,003 ஆகவும் உள்ளது.

## ஜீஎஸ்ரி/ எச்எஸ்ரி வரவு

## GST/HST Credit

- வரிவிலக்கினைக் கொண்டதாக கால் வருட காலத்துக்கு ஒரு முறை வழங்கப்படும் இக்கொடுப்பனவு குறைந்த வருமானம் தொடக்கம் நடுத்தர வருமானம் கொண்ட தனிநபர்களும் குடும்பங்களும் தாம் செலுத்துகின்ற ஜீஎஸ்ரி அல்லது எச்எஸ்ரி வரிகளின் ஒரு பகுதியை தணிப்பதற்கு உதவுகின்றது.
- இதற்கான கூடியபட்ச வருடாந்த வரவு நீங்கள் தனியராக இருந்தால் $451 டாலர் ஆகவும் திருமணமானவர் ஆகவோ வாழ்க்கைத் துணையுடன் பொதுச் சட்டத்தின் கீழ் கூடி வாழ்பவராகவோ இருந்தால் $592 டாலர் ஆகவும் இருக்கும். மேலும் 19 வயதிலும் குறைவாக உள்ள பிள்ளைகளுக்கு இது $155 டாலர் ஆக இருக்கும்.

## உறுதி வழங்கப்பட்ட வருமான உதவித் தொகை

## Guaranteed Income Supplement (GIS)

- இது குறைந்த வருமானம் கொண்டவர்களாக கனடாவின் உள்ளே வசித்து வருகின்ற நிலையில், முதிய வயது பாதுகாவல் ஓய்வுப் பணம் (Old Age Security pension) பெற்றுவருவோருக்கு வரிவிலக்கு உடையதாக மாதாந்தம் வழங்கப்படும் உதவிநலன் ஆகும்.

- இதற்கான கூடிய பட்ச மாதாந்தக் கொடுப்பனவுத் தொகை $919 ஆக உள்ளது.

## ஒன்ராறியோ முதியோர் பொதுசனப் போக்குவரத்து வருமான வரிக் கழிவு

### Ontario Seniors' Public Transit Tax Credit

- பொதுசன வாகனப் போக்குவரத்து செலவுகள் உடைய 65 வயதுக்கும் மேற்பட்ட முதியோருக்கு மீள அளிக்கப்படும் வருமான வரிக் கொடுப்பனவாக இது வழங்கப்படுகிறது.
- நீங்கள் தகைமை உடைய பொதுசன வாகனப் போக்குவரத்து செலவுகளாக $3,000 டாலர்கள் வரையில் கோரிக்கை செய்து ஒவ்வொரு வருடமும் $450 டாலர் வரையில் பெற்றுக் கொள்ள முடியும்.